1968 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: ஒரு துறையிலே பயிற்சி பெற்றவர் என்றால் வாழ்நாள் பூராவும், உத்தியோகம் முழுவதும் அங்கே இருப்பது என்பது அல்ல. அதைவிட முற்றிலும் முக்கியமான, உணவு வழங்கும் துறையில் கொள்முதல் பெறும் காரியத்தில், தஞ்சை மாவட்ட கலெக்டராக மாற்றப்பட்டு உணவுத் துறையின் காரியத்திற்கு மிகப் பெரிய அளவில், திறமையான காரியத்தைச் செய்து வருகிறார். அந்தக் கொள்முதல் செய்வதோடு நாம் செய்யும் விவசாயப் புரட்சியின் மூலம் இருபோகம் செய்வதற்கு அந்த அதிகாரியின் திறமையைப் பயன்படுத்திக் கொள்ள தஞ்சை மாவட்டக் கலெக்டராக நியமிக்கப்பட்டார்.

எரையானூர் விவசாயப் பண்ணை

*** 31வினா—திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) திண்டிவனத்திற்கு அருகிலுள்ள எரையானூர், மானூர் கிராமங்களில் உள்ள சுமார் 75 எக்கர் விவசாய நிலங்களை எரையானூர் விவசாயப் பண்ணைக்காக மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக்கில் எடுக்கப்பட்டு அவற்றிற்கான குத்தகையோ கிரையத் தொகையோ இன்னும் கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எ. கோவிந்தசாமி: (அ) & (இ): திண்டிவனம் வட்டார ஆராய்ச்சி நிலையக்கிற்கென கேட்டு எடுத்துக் கொண்ட 83.43 எக்கர் நிலப்பரப்பிற்குரிய 56 நில உரிமையாளர்களில் 49 பேருக்கு அகற்கான இழப்பீட்டுத் தொகை அளிக்கப்பட்டுவிட்டது. எஞ்சியுள்ள எழு பேருக்கு வழங்கப்படவேண்டிய இழப்பீட்டுக் தொகை அவர்கள் நில உரிமைபற்றி தாவா உள்ளதாலும், மேற்கொண்டு விசாரணை நடத்த வேண்டியிருப்பதாலும் அது வருவாய்த்துறை வைப்பீட்டுக் கணக்கில் கட்டி வைக்கப்பட்டுள்ளது.

பலநோக்கு கூட்டுறவு நாணயச் சங்கங்கள்

***32 வினா.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டக்கில் உள்ள பலநோக்கு கூட்டுறவு நாணயச் சங்கங்களின் 1964-65, 1965-66, 1966-67 வருடங்களுக்கான கணக்குகள் ஆடிட் செய்யப்பட்டுவிட்டனவா?

(இ) இவைகளில் கையாடல் செய்யப்பட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சங்கங்கள் எவை, எவை?

(உ) அவைகளின் பேரில் என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன?